# செய்தி வெளியீடு – 15.05.2009

எண் 241

## மதுரை அருகே அவனியாபுரம் கிராமத்தில், சாலை விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு நிவாரண உதவி

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

இன்று (15.05.2009) காலை 10.40 மணியளவில் விருதுநகரிலிருந்து மதுரையை நோக்கி வந்து கொண்டிருந்த வேனும், மதுரையிலிருந்து கோவில்பட்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தும், மோதிக் கொண்டதில், 15 பேர் (8 ஆண்கள் மற்றும் 7 பெண்கள்) சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டனர். மேலும் இந்த விபத்தில் 7 பேர் பலத்த காயமடைந்துள்ளனர். இந்தத் துயர சம்பவம் குறித்த செய்தி அறிந்ததும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்து உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.50,000 வீதம் உதவியாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

******

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

Secretary to Government
Public and Rehabilitation Dept.
Secretariat, Chennai-600 009